இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 349 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 13 – திங்கள்கிழமை 29 ஜுலை 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 349 : Thiruvalluvar Year - 2055 - Aadi 13 - Monday 29 July 2024 - Dak 8 Pages ₹ 5.00



### டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் மற்றும் ஆடிப்பெருக்குக் கொண்டாட்டத்தை முன்னிட்டு

# மேட்டூர் அணையில் நீர் திறப்பு!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (28.7.2024) தலைமைச் செயலகத்தில், கர்நாடக மாநிலத்திலுள்ள காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெருமழை பொழிந்து உபரி நீர் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளதால், இதனை முறையாகப் பயன்படுத்துவதற்கும், ஏரிகள் மற்றும் கண்மாய்களில் சேமிப்பதற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா,, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூலை 29-**

**டெல்டா மாவட்டங்களின் விவசாயிகள் நலனையும் ஆடிப்பெருக்குக் கொண்டாட்டத்தையும் முன்னிட்டு மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்துவிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறப்பட்டிருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (28.07. 2024), கர்நாடக மாநிலத்திலுள்ள காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெருமழை பொழிந்து உபரி நீர் வரத்து உயர்ந்துள்ளதால், மேட்டூர் அணையிலிருந்து நீரை திறந்து விடுவது குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

தமிழ்நாட்டிற்குரிய காவிரி நீரைப் பெற்று நமது விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வந்த நிலையில், கர்நாடக மாநிலத்திலுள்ள காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெருமழை பொழிந்து உபரி நீர் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியிலுள்ள 13 மாவட்டங்களில், 5,339 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு காவிரி நீரை கடைமடைக்குக் கொண்டு செல்லும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 11 மாவட்டங்களிலுள்ள 925 முறை சார்ந்த ஏரிகளில் 8.513 டி.எம்.சி நீரினை நிரப்பும் வகையில் ஏரிகளும் தயார் நிலையில் உள்ளன.

மேலும், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி டெல்டா மாவட்ட விவசாய பெருங்குடி மக்களுக்காக குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தினை அறிவித்திருந்தார்கள். அந்தப் பணிகளுக்காக ரூ.78.67 கோடி நிதி வழங்கி கடந்த 22.06.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புத் தொகுப்பில் நெல் இயந்திர நடவடிக்கைக்கான ஊக்கத் தொகை, நெல்விதை விநியோகம் மற்றும் பல்வேறு வேளாண் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!**

இந்த நிலையில், மேட்டூர் அணையில் கடந்த ஜீலை 17ஆம் தேதி முதல் நீர்வரத்துத் தொடர்ந்து அதிகரித்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 109.20 அடியாகவும், நீர் இருப்பு 77.30 டி.எம்.சியாகவும் உள்ளது. கர்நாடாகவிலுள்ள 4 முக்கிய அணைகளும் நிரம்பி உபரி நீர் வினாடிக்கு சுமார் 1.48 இலட்சம் கனஅடி வந்து கொண்டிருக்கிறது. கர்நாடாகவில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் மழை தொடர்வதால், இந்த நீர்வரத்து மேலும் மூன்று நாட்களுக்குத் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசன சாகுபடிக்கு நீரைத் திறந்து விடுவது குறித்து நேற்று காலை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

**ஏரி, குளங்களில் நீரை சேமிக்க உத்தரவு!**

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மேட்டூர் அணைக்கு வருகின்ற

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

### ஒன்றிய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக

## உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர இந்திய பார் கவுன்சிலிடம் வலியுறுத்தல்!

### தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தகவல்!

சென்னை, ஜுலை 29-

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மூன்று குற்றவியல் சட்டங்களால் அனைத்து தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அவற்றை திரும்பப் பெற வலியுறுத்தி பார் கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வரைவுச் சட்டம் தயாரிக்கப்பட்ட கடந்த 2020ஆம் ஆண்டே, உச்ச நீதிமன்ற நீதிபதி மற்றும் சட்ட வல்லுனர்கள் அடங்கிய குழுவை நியமித்து ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், ஆனால், எந்த விவாதங்களும் நடத்தாமல் பார் கவுன்சிலின் ஆலோசனைகளை கருத்தில் கொள்ளாமல் இந்த கிரிமினல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநில பார் கவுன்சில்களின் பிரதிநிதிகள், மூத்த வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக் குழுவை அமைத்து சட்டங்களை திரும்பப் பெறும்படி பிரதமர், உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர்களை வலியுறுத்தும்படி இந்திய பார் கவுன்சிலிடம் கேட்டுக் கொள்வதாகவும், அதன் பிறகும் சட்டங்களை திரும்பப் பெறாவிட்டால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரும்படி இந்திய பார் கவுன்சிலை வலியுறுத்த உள்ளதாகவும், புதிய கிரிமினல் சட்டங்களை ஆராய ஓய்வுபெற்ற நீதிபதி சத்தியநாராயணன் தலைமையில், குழுவை நியமித்த தமிழ்நாடு அரசின் முடிவுக்கும், இந்த சட்டங்களை எதிர்த்து தி.மு.க. சார்பில் வழக்கு தாக்கல் தொடரப்பட்டுள்ளதை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் வரவேற்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு

# அனைத்து உதவிகளும் அரசு சார்பில் செய்து தரப்படும்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

**சென்னை, ஜுலை 29-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என திருநெல்வேலி மாவட்டப் பொறுப்பு அமைச்சரும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சருமான தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலய பகுதிக்குட்பட்ட மாஞ்சோலை BBTC தேயிலை நிறுவனத்தின் செயல்பாடுகள் முடிவுற்றதால், அங்கு பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் அனைத்து உதவிகளையும் செய்து தர முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதாரத்திற்கான அனைத்து உதவிகளும் அரசால் செய்யப்படும்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், பல்வேறு அரசியல் கட்சி மற்றும் பொதுநல இயக்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் பணியிழந்த தொழிலாளர்களுக்கு வீட்டுமனை மற்றும் வீடுகள், வாழ்வாதாரத்திற்கான உதவிகள் உள்ளிட்டவற்றை வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு!**

மாஞ்சோலையிலுள்ள BBTC தேயிலை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 99 ஆண்டு காலக்குத்தகை 11.02.2028 அன்று முடிவடைவதைக் கருத்திற்கொண்டு, மேற்படி நிறுவனம் மார்ச், 2024ல் தனது நிறுவனத்தில் பணிபுரியும் 559 தொழிலாளர்களுக்கான விருப்ப ஓய்வு திட்டத்தை அறிவித்தது. அப்போதே, அரசு சார்பில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் தலைமையில் தொழிலாளர் நலத் துறை, வருவாய்த் துறை, வனத்துறை அலுவலர்கள் அடங்கிய சிறப்புக் குழு உருவாக்கப்பட்டது. அக்குழு, தொழிலாளர்கள் மற்றும் அங்குள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தது. மேலும் அவர்களை விருப்ப ஓய்வில் செல்ல நிறுவனம் கட்டாயப்படுத்தினால் தொழிலாளர் நலத்துறையில் புகார் அளிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டு, தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்களும் வழங்கப்பட்டுள்ளன.



| வயது | தொழிலாளர் எண்ணிக்கை | கருணைத் தொகை (ரூ) | மொத்தம் வழங்கப்படும் தொகை (சட்டப்பூர்வ பலன்கள் உட்பட, சராசரியாக) (ரூ) |
|---|---|---|---|
| 59 | 33 | 3,63.876.48 | 4,60,985 6,36,153 |
| 58 | 39 | 3,33,314.72 | 4,30,969 6,42,110 |
| 50 - 57 | 291 | 2,83,314.72 | 2,85,785 5,83,628 |
| 49 வரை | 171 | 2,12,486.04 | 2,18,4284,71,490 |
| | 534 | | |

இந்நிலையில், செப்டம்பர் மாதத்திற்குள் ஓய்வு பெறவுள்ள 23 தொழிலாளர்களைத் தவிர்த்து, 536 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அவர்களின் முழு சட்டப்பூர்வ பணப் பலன்கள் மற்றும் நிறுவனத்தால் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கருணைத்தொகையில் 25% ஆகியவற்றை பெற்றுக்கொண்டனர் என நிறுவனத்தின் சார்பில் தொழிலாளர் நலத்துறைக்கு அறிக்கை அளிக்கப்பட்டது.

நிறுவனத்தின் சார்பில் பின்வருமாறு தொழிலாளர்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு வாழ்வாதார வசதிகள் வழங்கும் பொருட்டு மேற்கண்ட சிறப்புக் குழுவால் விவரங்கள் சேகரிக்கப்பட்டதில், 389 குடும்பங்களைச் சார்ந்த

418 தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதில், 266 நபர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலும்,

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்